இந்த சதஸ்களுக்கு ஆரம்பம் முதல் சென்ற ஆண்டு வரை நேரில் பங்குகொண்டு வழிகாட்டிவந்த ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் சர்வ தீர்த்தக் கரையில் குடில் அமைத்துக்கொண்டு மௌனம் அனுஷ்டித்து வருவதால், இவ்வருஷ சதஸ்ஸில் அவர் பிரத்தியட்சமாக இருக்கவில்லை. ஆனால் அந்தக் குறை தெரியாதபடி நடவடிக்கைகளை நடத்த முயன்றார் புதுப் பெரியவர். அவருடைய ஆழ்ந்த ஆன்மீக ஞானமும், நிர்வாகத் திறமையும் இவ்வருஷ சதஸ்ஸில் நன்கு வெளியாயிற்று எனலாம். நிகழ்ச்சிகளைக் காலம் தவறாமல் ஆரம்பித்து முடிப்பதும், பொதுவாக நேரத்தைப் பற்றிக் கவலையில்லாமல் பேசுகிறவர்களை நேரத்திற்குள் கட்டுப்படுத்துவதுமே அவருடைய பெரிய சாதனை யென்று கூறவேண்டும்.

சென்ற வருஷ சதஸ் மலரை வெளியிட்டுப் புதுப் பெரியவர் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டதாவது:

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். கோபுரத்தைத் தரிசித்தாலே கோடி புண்ணியம் வந்து தொண்டுகூடச் செய்திருக்கிறார், பெரிய புராண நிகழ்ச்சிகள் இந்தக் கலியுகத்திலேயே நடந்தவை. மஹரிஷிகளும், மகான்களும் வழிபட்ட கோயில்களைத் தான் பின் வந்த அரசர்கள் பெரிதாகக் கட்டினார்கள். காஞ்சியில் எங்கும் லிங்கங்களைக் காணலாம். வயல் வெளிகளில்கூட லிங்கங்கள் தரிசனமளிக்கின்றன. அக்காலத்தில் மக்களிடையே பெருக்கெடுத்த பக்திவெள்ளத்தையே இது காட்டுகிறது.

''கோயில்கள் தங்கள் சொந்த சக்தியினால்தான் நிற்கின்றன. அருள் சக்தி தான் அவற்றைக் காப்பாற்றி வருகின்றன. கிராமக் கோயில்களை நாம் மறந்துவிடக்கூடாது. நகரங்களுக்கு வந்துள்ளவர்கள் கூட வருஷத்திற்கு ஒருமுறையாவது கிராமங்களுக்குச் சென்று திருவிழாக்களையும் இது போன்ற கலைவிழாக்களையும் நடத்தவேண்டும். கிராமக் கோயில்கள் நன்றாக நடந்து வந்தவரையில் வில்லுப்பாட்டு கரகம் போன்ற கிராமியக் கலைகளும் செழிப்பாக இப்பொழுது கூட வில்லுப்பாட்டு, கரகம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுசெய்தால் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் வந்து ரசிக்கின்றனர் என்பது இந்த சதஸ்களில் நிரூபணம் ஆகிறது. இதுபோல் ஒவ்வொரு கிராமத்திலும் சதஸ்களும் கலைவிழாக்களும் நடைபெறவேண்டும். கிராமக் கோயில்களில் உத்ஸவங்கள் நடக்குமாறு பார்த்துக்கொள்வது பொது மக்களின் பொறுப்பு.

''இன்றைய நிலையில் குருக்களுக்கு ஜீவனம் நடத்துவதே கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்குத் தகுதியை ஏற்படுத்தி தருவது மடாதிபதிகளின் கடமை அவர்களைப் பராமரிப்பது பொதுமக்கள் பொறுப்பு. அவர்கள் பயிற்சி பெற பாடசாலைகள் ஏற்படுத்தித் தருவதோடு கவலையில்லாமல் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து தர வேண்டும். அவர்கள் வாழ்க்

கோயில்களின் பராமரிப்புக்கும், கோயில்சிப்பந்திகளின் நல்வாழ்வுக்கும் செலவிட வேண்டும். கோயில்களுக்குச் சொத்து எழுதி வைத்தவர்கள்எந்த நோக்கத்துடன் எழுதிவைத்தார்களோ அந்த நோக்கம் ஈடேறும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## ''ஆலயத்தில் சினிமாஇசை வேண்டாம்''

ஊர்காவற்றுறை, வியா.

''ஆலய உற்சவ காலங்களில் சினிமாஇசைத்தட்டுக்களை ஒலிபரப்பக்கூடாது. அதற்குப்பதில் பக்திப்பாடல்கள், தேவார, திருவாசகங்களையேபயன்படுத்தவேண்டும் என்னும்தீர்மானம் சரவணை தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சபைத்தலைவர் திரு. சி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆலய நித்திய பூசைக்காலங்களில் பூசகர் தேவார திருவாசங்களையும் ஓத வேண்டும்'' எனக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## ''சம்பந்த மில்லை''

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரில் சமீபகாலமாக இரவுநேரங்களில் அடிக்கடி மின்சாரம்தடைப்பட்டு வருவதற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும் இது ஒரு வேலை நிறுத்தமுயற்சியாகக் கருதப்படுவது தவறு என்றும், ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன சங்க யாழ்ப்பாணக் கிளை ஊழியர்கள் எவ்வித சதிவேலைகளிலும் ஈடுபடவில்லையென்றும் பிரஸ்தாப கிளைச் சங்கத் தலைவர் திரு. விஜயலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## இரு போட்டிகள்

மல்லாகம், வியாழன்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ள ஆமதாபாத் நகரில் பதட்டநிலைமை தொடர்ந்து இருந்து வந்த போதிலும் நேற்று இரவும் பகலும் ஆசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம் பெறவில்லை. நேற்று மட்டும் சுமார் 200 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். கலவரங்களில் இதுவரை 500 பேர்வரை கொல்லப்பட்டிருப்பதாகத் கருதப்படுகின்றது. 400 பேர்வரை பலியாகியிருப்பதாக அரசாங்க செய்திகள் கூறுகின்றன.

ஆமதாபாத்திலும் அதன் நகர் பகுதியிலும் ஏற்பட்டுள்ள கலவர நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்காக உள்துறை அமைச்சர் திரு சவான் அங்கு சென்றுவிட்டு தலைநகர் திரும்பியிருக்கிறார்.

ஆமதாபாத்தில் விரைவில் அமைதி நிலவுவதற்கு ஒத்துழைக்குமாறு அங்குள்ள மக்களை திரு. சவான் கேட்டுக் கொண்டுள்ளார்.

பீதி இன்னும் நிலவுகின்றது. திரும்பவும் ஊரடங்கு உத்தரவுகளைத் தளர்த்தும் போது நன்கு பரிசிலனை செய்த பிறகே அதிகாரிகள் இனி சட்டத்தைத்தளர்த்துவார்கள். என்று திரு சவான் புதுடில்லியில் கூறினார்.

ஆமதாபாத்தில் இடம் பெற்ற வெறிச் செயல்கள் குறித்து எல்லாருமே வெட்கித்தலை குனிய வேண்டும் என்று சவான் குறிப்பிட்டார்.

காணிப்பு இருந்து வருகின்றது சுமார் நாலாயிரம் துருப்புகள் நகரில் நிலைகொண்டிருக்கின்றன.

முன்னாள் துணைப்பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய்தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார். ஆமதாபாத்தில் மீண்டும் அமைதிஏற்படும்வரை தா உண்ணாவிரதத்தைக் கைவிடப்போவதில்லையென்று அவர் அறிவித்திருக்கிறார். ஆமதாபாத்திலுள்ள வித்தியா பீடத்தில் அவர் உண்ணாவிரதம் இருக்கிறார். அவரைப் பார்ப்பதற்கு பார்வையாளர்கள் ஒரு சிலர் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள், திரு. தேசாய் தண்ணீர் மட்டுமே குடிக்கின்றார். ராணுவம் இல்லாமல் நிலைமை மாமூல் நிலைமைக்குத் திரும்பும்வரை உண்ணாவிரதத்தைக் கைவிடப்போவதில்லை யென்று அவர் கூறியிருக்கிறார்.

## அமெரிக்காவில் இஸ்ரேல் பிரதமர்

நியூயோர்க், செப். 25

இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி கோல்டாமெயர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கிறார். முதலில் பிலடெல்பியாவுக்கு வந்து சேர்ந்த அவரை ஏராளமானமக்கள் வரவேற்றார்கள். திருமதி மெயர் மேற்கொண்டு இராணுவ தளபாட உதவிகளை கோருவதற்காக அமெரிக்காவுக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

## நன்னடத்தைப் பிணை

மல்லாகம் வியா.

சுமார் 35 ரூபா பெறுமதியான பெற்றோமாக்ஸ் விளக்கைத் திருடியதாக வசாவிளானைச்சேர்ந்த ரஞ்சன் என்ற 17 வயது வாலிபர் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ் ஆனந்த குமாரசாமி முன்னிலையில் ஓ புக் கொண்டார். அச்சுவேலிப் பொலிசாரால் தொடரப்பட்டிருந்த இவ் வழக்கில் எதிரியை மூன்று வருடகால நன்னடத்தைப் பாதுகாப்பில் செல்ல நீதிபதி உத்தரவிட்டார். எதிரி சார்பில் வழக்கறிஞர் எஸ். நடராசா ஆஜராகியிருந்தார்.

## லைசென்ஸ் இல்லாததுப்பாக்கி

பாணந்துறை, வியாழன்

மொரட்டுவ பொலிசாரால்இரண்டு கைகுண்டுகளையும்லைசென்ஸ்இல்லாத துப்பாக்கி ஒன்றையும் மொரட்டுவ புகையிரதவீதியிலுள்ள ஒரு வீட்டில் கண்டுபிடித்தனர்.

இதைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் நால்வர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பாணந்துறை மாஜிஸ்திரேட்திரு.ஜே.ஜே. எப். ஏ. டையஸ் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். நால்வரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கின் விசைப் பொறிமேல் பாய்ந்ததால் ஏற்பட்ட விபத்தால் அவர் துவக்குச் சூட்டுக்கு ஆளாகி இறந்தார் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

## இலவச நூல்

உடுப்பிட்டி, வியாழன்

செல்வச்சந்நிதிக் கந்தன் அருட் புகழ் பாக்கள் என்னும் நூலை நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர் இலவசமாக விநியோகித்து வருகின்றனர்.

## 'துறவியின் லட்சணம்'

உடுப்பிட்டி, வியாழன்

''ஒவ்வொரு மதத்திலுமுள்ள குணம் குற்றம் இரண்டும் நன்கு தெரிந்தால் தான் மதவெறி அகலும் என்பது சுவாமி விவேகானந்தர் கருத்து. வேறுபாடும் சமயங்கள்வாயிலாக விளங்குவது ஒரே பரம் பொருளே. உலகத்தை வெறுத்தோ அல்லது உலக வாழ்வில் ஏமாற்றம் அடைந்தோ சமுதாயத்திலின்றும் விலகி ஓடுபவன் துறவியாக மாட்டான். ஆனால் சமுதாயத்தில் எல்லாவிதமான சீரும் சிறப்பும் பெற்றிருக்கையில் இவையாவற்றிலும் சிறந்தது பரமார்த்திகம் என்றறிந்து அதை ஊன்றி நாடுபவனே உண்மையான துறவியாவான்.''

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீசாரதா நிலைய சேவாச்சிரம பொதுச்செயலாளர் திரு. இரத்தினசபாபதி கிளிநொச்சி கந்தசுவாமிகோவில் முன்றலில் பேசுகையில்கூறினார். கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை அதிபர் டாக்டர் சி. சண்முகநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## இன்று காந்திவிழா

சுழிபுரம், வெள்ளி

பண்ணும், தொல்புரம் சுழிபுரம், நெல்லியான், மூளாய் ஆகிய கிராமமுன்னேற்றச் சங்கங்கள் கூட்டாக கொண்டாடும் காந்தி நூற்றாண்டு விழா இன்று மாலை 6 மணியளவில் வழக்கம்பரை அம்மன்கோவில் வீதியில் நடைபெறவிருக்கிறது. திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திருவாளர்கள் வி. பொன்னம்பலம், அ. அமிர்தலிங்கம் எம். பி.பண்டிதர் ப. இரா்சகுரு உட்பட பலர் பேசுவர். வைரமுத்து குழுவினரின் அரிச்சந்திரா - மயானகாண்டம் நாடகமும் இடம்பெறும்.

உட்பட ஐவர் அடங்கிய குழு ஒன்று இம்மாதம் 27-ம் திகதி இலங்கையிலிருந்து புறப்படுகிறது. சுதந்திர விழா அக்டோபர் 1-ல் நடைபெறவிருக்கிறது.

அப்பலோ பயணம்

## ''கனவை நனவாக்கினர்''

யாழ்ப்பாணம், வியாழன்

''அன்றைய காலத்தில் புலவர்களும், கவிஞர்களும் நிலவைப் பற்றிய பாடல்களுக்கு மலர்ச்சியூட்டுவது போன்று இன்றைய விஞ்ஞானிகள் நிலவில் இறங்கி விட்டார்கள். உலக மக்களின் கனவுகளை நனவாக்கியுள்ளது அப்பலோ பயணம்.''

களுதாவளை கென்னடி இளைஞர் மன்றத்தின் ஆதரவில் அமெரிக்கத் தகவல் இலாகாவினரால் காண்பிக்கப்பட்ட அப்பலோ சந்திர மண்டல யாத்திரைப் படக்காட்சியில் பிரதம பார்வையாளராகக் கலந்துகொண்ட கிராமசபைத் தலைவர் திரு. த.வேதநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தகவல் இலாகாவினர் சார்பில் கலந்துகொண்டு இத்திரைப் படத்தை அறிமுகஞ் செய்துவைத்த திரு. இராபத்மநாதன் பேசுகையில் அப்பலோ பற்றிய மேலும் பல திரைப் படங்களை நாம் இக்கென்னடி இளைஞர் மன்றத்தினர் மூலம் இப்பகுதி மக்களுக்குத் திரையிடுவோம் எனக் கூறினார்.

மன்றச் செயலாளர் திரு க. சிதம்பரநாதன் நன்றியுரை கூறினார்.

## திருட்டு

வேலணை, வியாழன்

வேலணை கிழக்கில் இரும்புக் கேற் ஒன்று திருட்டுப் போய்விட்டதாகபுகார் செய்யப்பட்டுள்ளது. இந்த 'கேற்' தோட்டமொன்றுக்கு பாதுகாப்பாகப் போடப்பட்டிருந்தது. வேலணை மேற்கிலும் பிள்ளையார் ஆலயத்திலுள்ள விக்கிரக மேலங்கியும் திருடப்பட்டுள்ளதாம்.

## ஓய்வு பெறுகிறார்

உடுவில், வியாழன்

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் தலைமை ஆசிரியர் திரு.க. நாகலிங்கம் அக்டோபர் மாதம் 16-ம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

திரு. நாகலிங்கம் இவ்வித்தியாசாலையில் சுமார் 40 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்.

பெரியவர் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டதாவது'

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். கோபுரத்தைத் தரிசித்தாலே கோடி புண்ணியம் என்றால் கோயிலுக்குள் உள்ள மூர்த்தியைத் தரிசித்தால் இன்னும் எவ்வளவு புண்ணியம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. 'சிவ' 'ராம' என்ற இரண்டெழுத்துப் பெயர்களை அந்தரங்க சுத்தியோடு சொன்னாலே போதும்.

கோயில்கள், மஹரிஷிகளின் தவத்தின் பயனாகவும், ஆஸ்திகர்களின் ஆன்மீக அனுபவங்களின் பயனாகவும் தோன்றியிருக்கின்றன. ஸ்தல புராணங்கள் இந்த வரலாறுகளைக் கூறுகின்றன. பக்தர்களுக்குப் பகவானே

ஏற்படுத்தித் தருவதோடு கவலையில்லாமல் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து தரவேண்டும். அவர்கள் வாழ்க்கையைப்பற்றிய கவலையில்லாமல் இருந்தால்தான் கோவில்களுக்கு ஸாந்நித்யம் ஏற்படும். அதன் விளைவாக உலகமும் க்ஷேமமடையும்.

'கோயில்களிலிருந்துவரும் வருமானத்தை வேறு காரியங்களுக்குச் செலவிடாமல் கோயில்களுக்கே பயன்படுத்த வேண்டுமென்று ஆந்திரப் பிரதேசத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது அதுபோல் இங்கும் செய்வது நல்லது. பெரிய கோயில்களின் உபரித் தொகையைச் சிறிய

## இரு போட்டிகள்

மல்லாகம், வியாழன்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் கலந்துகொண்ட முதற் பிரிவு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 1-0 கோலால் ஹாட்லி கல்லூரியினர் வெற்றியீட்டினர்.

இரு பாடசாலைகளினதும் இரண்டாம் பிரிவுக்கோஷ்டிகள் கலந்து கொண்ட மற்றொரு உதைபந்தாட்டத்தில் 4-1 கோல்களால் மகாஜன வீரர்கள் வெற்றி பெற்றனர்.

இரு போட்டிகளும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

# சீனக்குடியரசுத் தினவிழாவில் தலைவர் மா-ஓ கலந்துகொள்வார்

## உத்தியோகப் பூர்வமான அறிவிப்பு

ஹாங்காங், செப் 25

சீனத்தலைவர் மா-சே-துங் அக்டோபர் முதலாம் திகதி சீனக் குடியரசு தினவிழாவில் கலந்து கொண்டு இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வார். இத்தகவலைப் பீகிங் அறிவித்திருக்கின்றது. இவ்வாறு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவது இதுவே முதல் தடவை.

சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் மா-சே-துங் மரணப் படுக்கையில் இருக்கிறார் என்றும், இறந்துவிட்டார் என்றும் வெளியான செய்திகளை சீனா ஏற்கெனவே மறுத்து இருக்கிறது.

76 வயது நிரம்பிய மா-சே-துங்குக்கு இம் மாதம் 2-ந் தேதி திடீர் மாரடைப்பு ஏற்பட்டதாகவும், இதன் காரணமாக அவர் மயங்கிய நிலையில் படுத்த படுக்கையில் இருப்பதாகவும் முன்னர் செய்திகள் வெளியாகின.

மாஸ்கோவில் உள்ள கம்யூனிஸ்ட் வட்டாரங்களில் இருந்து இந்தத் தகவல் கிடைத்ததாக கூறின.


இதற்கு மாஸ்கோவிலுள்ள சீனத் தூதரகம் அவசரம் அவசரமாக மறுப்பு வெளியிட்டது. 'இந்தத் தகவல் அபத்தமானது. அப்பட்டமான பொய்' என்று சீன தூதரகம் அறிவித்தது.

'சீனாவை எதிர்த்து பிரசாரம் செய்து வரும் அமெரிக்க பிற்போக்கு பத்திரிகைகள் வழக்கமாக வெளியிட்டுவரும் பொய் இது' என்று சீனத் தூதரகம் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் கூறப்பட்டது.

மா-சே-துங் உடல்நிலை பற்றி இன்னொரு முரண்பட்ட தகவலும் வெளியாகி உள்ளது.

'சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் இப்போது கடுமையான பதவிப் போராட்டம் ஏற்பட்டு இருப்பதாகவும், தனது எதிரிகளை ஒடுக்குவதற்காக இப்போது மா-சே-துங் திட்டம் தயாரித்து வருவதாகவும் தைவானில் இருந்து வந்த செய்திகள் கூறுகின்றன.

மா-சே-துங்கும், அவர் மனைவியும், மா-சே-துங்கின் வாரிசான லின்-பியாவோ என்சவரும் இப்போது ஷாங்காய் அருகில் உள்ள ஹாங்கோ என்ற இடத்தில் தங்கியிருந்து இதற்கான கான திட்டங்களை வகுத்து வருவதாகவும் அந்தத் தகவல் கூறுகிறது.

எலிகளா?
றகுமின்,
வீட்டிலோ, வயலிலோ, தோட்டத்திலோ
எலிகளை இல்லாதொழிக்கும்.
றகுமின் எலிகளைத் தான் கொல்லும்;
வீட்டுப் பிராணிகளையோ, மனிதரையோ பாதிக்காது.
றகுமின் சிறிய சிக்கனப் பக்கெட்டில் கிடைக்கும்.
றகுமின்,
ஒரு பிரத்தியேக பேயர் த[illegible]பு.
வாங்கக் கிடைப்பவற்றில் மிகச் சிறந்த எலிநாசினி.
BAYER
உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி.
இலங்கையில் அடைத்து விநியோகிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
R9009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

காரணங்களை ஆராய்ந்து பார்த்து சிந்தனை செய்தபின்னர் பெருந்தன்மையும் நிதானமும் பெறவேண்டும்'. —'மகாத்மா காந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதிமாதம் 10-ந் திகதி (26-9-69)

## தந்தி, தொலைபேசி சேவைகள்

இலவசக்கல்வி, இலவச அரிசி இலங்கையில்தான் மக்களுக்குக் கிடைக்கிறதென்று பெருமையாகச் சொல்லிக் கொள்பவர்கள் தந்திக்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு பத்துசதம் செலவுடன் தந்திகளைத் தபாலில் அனுப்புவதுபற்றிப் பெருமை கொள்ளமுடியுமா?

வெளிநாடுகளில் நடைபெறும்தபால்தந்தித்தொடர்புச் சேவை சம்பந்தமான மகாநாடுகளில் நமது நாட்டு அமைச்சர்களும் தபால் தந்திச்சேவை அதிபர்களும் அதிகாரிகளும் கலந்துகொள்வதிலும் மகாநாடு முடிவடைந்ததும், இங்கு வந்து இதைச்செய்வோம், அதைச்செய்வோம் என்று பெருமையாகப் பேசுவதிலும் குறைச்சல் இல்லை. ஆனால் எதுவும் காரியத்தில் நடந்ததில்லை. இப்போதும்கூட உதவிப் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஹொங்கொங்கிலும் டோக்கியோவிலும் நடைபெறும் தபால் தந்தி, தொலைபேசித் தொடர்பு சம்பந்தமான மகாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லவிருக்கிறார்.

மகாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டால் மட்டும் போதாது அவற்றினால் நமக்குப்பயன்கிடைக்கவும் வேண்டும். ஒரு கண்டத்திலிருந்து மற்றொருகண்டத்துடன் ஒரு சில நிமிஷங்களுக்குள் தொடர்புகொள்ளக் கூடியமுறையில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ள இந்த நாளிலும்கூட யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் தொலைபேசித்தொடர்பு இருபத்தொன்பது மணிநேரம் துண்டிக்கப்பட்டிருந்ததென்றால் அதுவும் மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றங்கள் இல்லாத சமயத்திலும் இந்த நிலை ஏற்பட்டதென்றால் யார்தான் தபால், தந்தி, தொலைபேசித்தொடர்பு இலாகாமீது குறை கூறுதிருக்கமுடியும்?

தொலைபேசிக்கட்டணத்தை உயர்த்தினால் மட்டும் போதுமா? தொலைபேசி, தொல்லைபேசியாகாமல்உதவியாக இருக்க வழிவகைகாண வேண்டும்.

## ஆமதாபாத் துயரம்

ஆமதாபாத்தில் இருபிரிவினருக்கிடையில் ஏற்பட்ட வகுப்புக்கலகம் இதுவரை ஐநூறு பேரின் உரைப்பலி கொண்டும் இன்னும் அடங்கியதாகத் தெரியவில்லை. இக்கலகத்தை அடக்குவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. பிரதமர் திருமதி இந்திரா காந்தி உள்துறை மந்திரி திரு. சவான் மற்றும் தலைவர்களும் ஆமதாபாத் சம்பவம் குறித்துக் கவலை தெரிவித்திருப்பதுடன் கண்டனமும் தெரிவித்துள்ளனர். முன்னாள் உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் ஆம...

...செய்யவேண்டியது அவசியம். சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெரும்பான்மையினர் மதித்து, அவர்களைக் கௌரவித்து வாழவும் அதேசமயம் பெரும்பான்மையினரின் ஒத்துழைப்புடன் அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுவாழ சிறுபான்மையினரும் முன்வரக் கூடியமுறையில் நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப பொருத்தமான அரசியல் அமைப்பு பல இன, மத, மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற ஆசிய நாடுகளுக்கு அவசியம் என்பதையே இந்திய, இலங்கை, மலேசிய; சம்பவங்கள் உணர்த்துகின்றன.

செனட்சபையிலே:

# குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் கட்டுப்பாடு வேண்டுமாம்

நமது நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

'காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்த வழியொன்று கண்டோம் - இதிலென்ன குற்றம்?' என்று பாடி குடும்பக் கட்டுப்பாட்டுக்கு-கருத்தடை இயக்கத்துக்காகப் பிரச்சாரம் செய்தான் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்.

ஆனால் இன்று செனட் சபையிலே பேசிய செனட்டர் டி. எல் எவ். பெதிரிஸுக்கோ, ஸ்வீடன் நாட்டு ஆதரவுடன் இலங்கைக் குடும்பக் கட்டுப்பாட்டுச்சங்கம், 'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தும் வழிகளை' - குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைப் பிரச்சாரம் செய்வது குறிப்பாக 'பௌத்த சிங்கள' மக்களிடையே பிரச்சாரம் செய்வது கட்டோடு பிடிக்கவில்லை.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்தின் மூலமாக கருத்தடை இயக்கத்தின் மூலமாக இந்நாட்டின் பெரும்பான்மை சிங்கள மக்களைப் படிப்படியாகக் குறைக்கும் திட்டமே அமுல் நடத்தப்படுகின்றதென்று வண. மாடிகே பஞ்சாசீக மகாநாயகதேரோ பத்திரிகைகளுக்கும் இலங்கைக் குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தினருக்கும் எழுதிய புகார்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு 'இந்நாட்டின் சிங்கள, பௌத்த மக்களிடையே பலவந்தமாகக் கருத்தடைப் பிரச்சாரம் செய்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்' என்று வலியுறுத்தினார் செனட்டர் டி. எல். எவ். பெதிரிஸ்.

செனட்டர் டி. எல் எவ். பெதிரிஸ் ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்தவர் வயதில் முதிர்ந்தவர், அவரைவிட வயது குறைந்தவர்களாக இருந்தால், விரசமான, ரசாபாசமானவிஷயமென்று கருதி கருத்தடை முறைகளைப்பற்றி இவ்வளவு விளக்கமாக - விவரமாக - பேசியிருக்கமாட்டார்கள்தான்.

'வண. மாடிகே பஞ்சாசீக தேரோ, அரசியல் பிக்கு அல்ல; அவர் யூ. என். பி. யையோ, எஸ். எல். எவ். ...காக்க குடும்பக்கட்டுப்பாட்டு முறை தீவிரமாக அமுல் நடத்தப்படக் கூடாது என்று காட்ட முற்பட்ட செனட்டர் விஷ்ணுவைக்கூட துணைக்கழைத்துக் கொண்டார்.

'சிங்களவர்களையும், பௌத்தர்களையும் கண்காணித்துக் கொள்ள வேண்டிய கடமை விஷ்ணு கடவுளுக்கே இருக்கிறது' என்றும் சொன்னார் செனட்டர் பெதிரிஸ்.

'குழந்தைகளைக் கொடுப்பது ஆண்டவன்தான், எனவே மரம் நட்டவன் தண்ணீர் விடாமலோ விடுவான். குழந்தைகளைக் கொடுத்த ஆண்டவன் அவர்களுக்கு உணவும் கொடுக்கத்தான் செய்வான்' என்ற அடிப்படையில் கத்தோலிக்க மதமும், இஸ்லாமிய மதமும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை எதிர்க்கின்றன' என்று பேசிய செனட்டர் பெதிரிஸ், கருத்தடை ஒப்பரேஷன்கள் செய்யும் டாக்டர்களுக்கு ஊக்க அலவன்ஸ் கொடுப்பதற்கு இந்த ஆண்டு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதைச் சுட்டிக்காட்டி 'இப்படிப் பணம் கொடுத்து ஆசை காட்டினால் டாக்டர்கள், குழந்தைகள் இல்லாதவர்களுக்கும் ஒன்றிரண்டு இருக்கின்றவர்களுக்கும்கூட ஒப்பரேஷன் செய்துவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதனால் விபத்து ஏற்படப் போகிறது' என்றும் எச்சரிக்கை செய்தார்.

### தமிழ் டாக்டர்கள் கைவைக்க வேண்டாம்

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் கருத்தடை இயக்கமும் சிங்கள மக்களைச் சிறுபான்மையினராக்கும் ஒரு சதிகார முயற்சி என்ற ஒரு எண்ணம் சரியாகவோ தவறாகவோ 'பௌத்த சிங்கள மக்களிடையே பரவியிருக்கி[illegible]தென்று சொன்ன செ[illegible]ட்டர் பெதிரிஸ், 'தமிழ் டாக்டர்கள், இந்தக் காரணத்துக்காக, சிங்கள ஆண்களுக்கோ, பெண்களுக்கோ கருத்தடை செய்யு[illegible] முயற்சிகளில் கட்டா...

...ஏன் பிழையான விதிகளைக் கொண்டிருக்கிறீர்கள்'' என்று சொல்லி செனட்டர் பெதிரிஸின் வேண்டுகோளின் அரசியல் தாக்கத்தை முறியடிக்க முயன்றார் என்றாலும் செனட்டர் பெதிரிஸ் தொடர்ந்து தனது வேண்டுகோளை வலியுறுத்தி பேசி முடித்தார்!

இலங்கை குடும்பக்கட்டுப்பாட்டுச்சங்கத்துக்கு ஆலோசனையும், பொருள் உதவியும் அளித்துவரும் நாடு ஸ்வீடன்தான்

எனவே குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் குறைகூறவந்த செனட்டர் பெதிரிஸ் ஸ்வீடனை விட்டு வைப்பாரா என்ன?

ஸ்வீடன் நாட்டிலே பாடசாலைகளிலே பாலுணர்ச்சி பற்றிபாடங்கள் விரிவாகப்போதிக்கப்பட்டதன் விளைவாக பாடசாலைச் சிறுவர்களும் சிறுமியர்களும், தாங்கள் பாடசாலைகளிலே படித்த பாலுணர்வு பற்றிய பாடல்களையெல்லாம் செயல்முறையில் கடைப்பிடிக்க முயன்றதால் பெரும் விபத்து ஏற்பட்டது. இந்த நாட்டிலே குழந்தை உற்பத்தி அதிகரித்து பலமாடிகள்கொண்ட மகப்பேறு மனைகளைக் கட்ட வேண்டியிருந்தது என்றும் கதை சொன்னார்.

இந்தக் கதையைச் சொல்லிவிட்டு அதன் பினனால் உள்ள படிப்பினையையும் சொன்னார்.

''நமது நாட்டிலே 2500 ஆண்டுகளுக்கும் மேலாக பௌத்த சிங்களக் கலாச்சாரம் பாதுகாக்கப்பட்டு வந்திருப்பதால் மேலைநாட்டுக் கலாச்சாரம் நமது நாட்டுக்கு உகந்ததல்ல; தேவையுமல்ல எனவே நமது நாட்டுப் பள்ளிகளில் பாலுணர்வுப் பற்றிய பாடல்கள் தேவையேயில்லை'' என்பதுதான் அந்தப் படிப்பினை.

இவரைத் தொடர்ந்து பேசிய செனட்டர் ஜே. பி ஒபயசேகரா ப[illegible] வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவருவதைச் சுட்டிக்காட்டி வெகுவிரைவிலேயே இந்தநாட்டில் இரத்தக்களரி ஏற்பட்டு [illegible]...

உங்களுடன் இணைந்திருந்திருக்கும்கம்யூனிஸ்ட்டுகள்தான் புரட்சிசெய்வார்களேயொழிய, நாங்கள் ஆட்சியிலிருக்கும் வரை புரட்சி ஏற்படாது என்று திட்டவட்டமாகக் கூறினார்.

### செனட்டர் நீதிராஜா!

செனட்டர் நீதிராஜா பேசுகையில் வரவுக்கேற்ற செலவுசெய்யாத குடும்பங்கள் சின்னாபின்னமாகி சிதறுண்டு போவதைச் சுட்டிக்காட்டி, அரசாங்கமும் வரவுக்கேற்ற - நாட்டுத் தேவைககேற்றசெலவுகளைத்தான் செய்யவேண்டியதிருக்கிறது'' என்று சொன்னார்.

செனட்டர் நீதிராஜா பேச ஆரம்பித்தவுடனேயே எனது சக நிருபர் ஒருவர் 'பீடிராஜா' நீதிராஜா பேசப்போகிறார் என்று சொன்னார். அந்த அளவுக்குப்பீடித் வர்த்தகத்திலே முன்னணிவகிக்கும் செனட்டர் நீதிராஜா வரவு செலவுத் திட்டத்திலே பேசினால் பீடிகளைப் பற்றிப் பேசாமலிருக்க முடியாதே!

''என்னைப்பற்றிப் புகழ்ச்சியாகச் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை'' என்று அவையடக்கத்துடன் சொல்லிக் கொண்டு டாக்டர் ஜயநெத்தி என்ற அரசாங்க ஊழியர் கொடுத்த உற்சாகத்தின் விளைவாக நமது நாட்டிலே பீடிப்புகையிலை உற்பத்தி செய்யப்பட்டு வருடாந்தம் 60 லட்சம் ரூபாய் அந்நிய செலாவணி மீதப்படுத்தப்படுகிறது என்று விளக்கினார்,

செனட்டர் நீதிராஜா அமைதியானவர், எதிர்க்கட்சியினரின் அன்புக்கும் பாத்திரமானவர் எனவே எதிர்க்கட்சி செனட்டர் ஒபயசேகரா பெரிய பெயுய ஜவுளி ஆலைகளை நாம் நிறுவு முன், அவற்றிற்குத் தேவையான பருத்தியையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன ஆலோசனையை முழுமனதுடன் வரவேற்று எதிர்க்கட்சியிலிருந்தால் என்ன அரசாங்கத்தில் இருந்தால்...

## கச்சேரிமுறை ஒழியவேண்டும்

### பண்டாரநாயக்காவின் விருப்பம்



முன்னாள் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா மரணமான தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. 1937 மே மாதம் 7-ம் திகதி அவர் அப்பொழுதிருந்த சட்ட சபையில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்து நிகழ்த்திய ஓர் உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

கிராமசபைகள் பழைய காலத்திலிருந்த 'கன்சபா' முறைக்கு மாறுபட்டதென்றே நான் சொல்வேன். கன்சபா என்பதின் முன்னைய நோக்கம் என்னவென்றால் கிராமத்துக்கு மட்டும் கட்டுப்படுத்தப்பட்டகிராமசபையாக அமைவதாகும். இன்றிருக்கும் கிராமசபைகள் ஏராளமாள கிராமங்களை உள்ளடக்கியதாகஇருக்கின்றன. இவைகளில் பரந்த நிலப்பரப்புமட்டுமன்றி ஏராளமான மக்களையும் கொண்டதாகவிருக்கிறது. இப்போதுள்ள கிராமசபைகள் பழைய கன்சபாக்கள் அல்ல.

இந்தச் சந்தர்ப்பத்தில் பல்வேறு முறையான உள்ளூர் மன்றங்கள் பற்றியும், அவைகளில் கிராமசபையின் அந்தஸ்துபற்றியும் குறிப்பிட விரும்புகின்றேன். இப்... பொருத்தமாகவும், திருப்திகரமாகவும் இருப்பதாக நான் நினைக்கின்றேன்.

இவைகளுக்கு மேலாக எமக்குப் பிரதேச சபைகள் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. இது சம்பந்தமாக1928-ம்ஆண்டு பழைய சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையை நான் சுட்டிக் காட்டவிரும்புகின்றேன்.

இந்தக்கமிட்டி பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களின் வேலைகளையும் ஒருமுகப்படுத்தக்கூடியதான மாவட்டசபை (போர்டு) நிறுவலாமென யோசனை கூறியது. டொனமூர் கமிஷன் பிரதேச சபைகள் அமைக்கலாம்என்ற சிபார்சு செய்தபோது மேற்கண்ட யோசனையும் வற்புறுத்தப்பட்டது.

எனவே புதிய உள்ளூ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பவம் குறித்துக் கவலை தெரிவித்திருப்பதுடன் கண்டனமும் தெரிவித்துள்ளனர். முன்னாள் உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் ஆமதாபாத்தில் அமைதி ஏற்படவேண்டுமென்பதற்காக உண்ணாவிரதமிருந்து வருகிறார். நிலைமை சற்று திருந்திவருகிறதெனினும் பூரண அமைதி இன்னும்ஏற்படவில்லை. காந்தி மகான் பிறந்த குஜராத் மாநிலத்து ஆமதாபாத்தில் காந்திஜியின் நூற்றுண்டு ஜயந்தி விழாவை உலக நாடுகள் கொண்டாடும் இச்சமயத்தில் வகுப்புக்கலவரம் ஏற்பட்டிருப்பதும் நூற்றுக் கணக்கான உயிர்கள் அநியாயமாகப் பலி கொள்ளப்பட்டிருப்பதும் எவருக்கும் வேதனையளிப்பதாகும்.

மொரோக்கோ தலைநகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இஸ்லாமிய உச்சி மாநாட்டில், கலந்து கொண்டுள்ள நாடுகளின் அழைப்பின் மீது சென்ற இந்தியத் தூதுகோஷ்டி, அதில் கலந்துகொள்ள முடியாதபடி ஆமதாபாத் சம்பவம் செய்திருப்பது குறித்து இந்திய மக்கள் நிச்சயம் பெருமை கொள்ளமுடியாது.

வகுப்பு ஒற்றுமைக்காகவே உயிர்த்தியாகம் செய்தவர் காந்திமகான். அந்த உத்தமரின் உயிரைப் பலிவாங்கிய பின்னரும்கூட வகுப்புவெறி அடங்கவில்லையேயென்பது கவலையளிப்பதாகும்.

அகிம்சையை உலகுக்கு உணர்த்திய அண்ணல் காந்தி அவதரித்த இந்திய நாட்டில் அவரது நூற்றுண்டு ஜயந்திகொண்டாடப்படும் இச்சமயத்திலாவது வகுப்புஒற்றுமை ஏற்படவும் வன்முறைச் செயல்கள் நீங்கவும் இந்திய மக்கள் இனியாவது முன்வருவார்கள் என அமைதியையும், அன்பையும் விரும்பும் உலக மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தியச் சம்பவங்கள் ஆசியாவில் ஜனநாயகத்துக்கே பெரும் சோதனை ஏற்படுத்துகின்றது. இந்த ஜனநாயக அமைப்புமுறை ஆசியாவுக்குப் பொருத்தமானதா என்பதையும் நமது நாடுகளுக்கேற்ற முறையில் புதிய அமைப்பை ஏற்படுத்தவேண்டுமா என்பதையும் இந்தியா உட்பட இலங்கையும் மற்றும் ஆசியநாடுகளும் பரிசீலனை

வாழ்கின்ற ஆசிய நாடுகளுக்கு அவசியம் என்பதையே இந்திய, இலங்கை, மலேசிய; சம்பவங்கள் உணர்த்துகின்றன.

## அதிபரே கவனிக்கிறார்

பருத்தித்துறை, வியா.

கடந்த ஆடி மாதம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயப் பிரதம எழுதுவினைஞர் திரு. வி. கே. சின்னத்தம்பி இளைப்பாறியதன்பின் எவரும் அப்பதவிக்கு நியமிக்கப்படாமையால் மேற்படி கல்லூரி அதிபரே எழுதுவினைஞரின் கடமையையும் செய்துவருகிறார்.

## சிறுபான்மைத் தமிழர் முன்னணி நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிப் பொதுக்கூட்டம்சமாதான நீதவான் திரு. ஆ. குலேந்திரம் தலைமையில் நடைபெற்றது. புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

தலைவர்: முன்னாள் செனட்டர் ஜி. நல்லையா, இணைத்தலைவர்கள்: ஆசிரியர் க. நடராசா, திரு. என். ஆறுமுகம். தனாதிகாரி: ஜி. ஏ. பெர்னாண்டோ, இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் ஆ. குலேந்திரம், ஜே. பி. வி. மகாலிங்கம், பொதுக்காரியதரிசி: ஆசிரியர் வி. ஐயாத்துரை.

21 பேர் கொண்ட காரிய நிர்வாக சபையும், 100 பேர் கொண்ட பொது நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## ஆண்டுவிழா

உடுவில், வெள்ளி

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் கோவிலில் நடைபெற்றுவரும் கூட்டுப் பிரார்த்தனையின் ஏழாவது ஆண்டு நிறைவுவிழா இன்று மாலை நடைபெறவிருக்கின்றது. சுன்னாகம் மயிலணி சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பண்டிதர் மா. குமாரசாமி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

கோட்டை, வியாழன்

களுத்துறைப் பகுதியிலுள்ள நெசவு நிலையங்கள் யாவும் களுத்துறை நெசவாளர் சங்க வளவுள் கைத்தொழில் பொருட்காட்சி விழா ஒன்றை வருகிற நவம்பர் 15-ந் திகதி நடாத்தத் தீர்மானித்துள்ளன.

மாக-பேசியிருக்கமாட்டார்கள்தான்.

'வண. மாடிகே பஞ்சாசிக தேரோ, அரசியல் பிக்கு அல்ல; அவர் யூ. என். பி. யையோ, எஸ். எல். எவ். பி.யையோ சேர்ந்தவரல்ல. இந்த நாட்டின் சிங்கள, பௌத்த இனத்தைக் காப்பதற்காகத் தன்னலமில்லாமல் உண்மையுடன் உழைப்பவர்' என்று 'சர்ட்டிபிகேட்' வழங்கிவிட்டு சிங்கள, பௌத்த இனத்தைக்

செனட்டர் பெதிரிஸ், 'தமிழ் டாக்டர்கள், இந்தக் காரணத்துக்காக, சிங்கள ஆண்களுக்கோ, பெண்களுக்கோ கருத்தடை செய்யும் முயற்சிகளில் கட்டாயம் ஈடுபட வேண்டாம் என்று ஒரு வேண்டுகோளை தூக்கிப் போட்டார்.

நீதியமைச்சர் செனட்டர் ஏ. எல். விஜயமான்னகுறுக்கிட்டு, டாக்டர்களுக்குச் சிங்களவர்கள் தமிழர்கள் என்ற பேதமில்லை. நீங்கள்

வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவருவதைச் சுட்டிக்காட்டி வெகு விரைவிலேயே இந்தநாட்டில் இரத்தக்களரி ஏற்பட்டு புரட்சி வெடிக்கப்போகிறது என்று எச்சரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய திருமதி செனட்டர் சீதா செனிவிரத்ன புரட்சி வருவதாக இருந்தால் புரட்சி செய்வதாக இருந்தால்

செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன ஆலோசனையை முழுமனதுடன் வரவேற்று எதிர்க்கட்சியிலிருந்தால் என்ன அரசாங்கத்தில் இருந்தால் என்ன நாட்டுமுன்னேற்றத்துக்காக நல்ல பல ஆலோசனைகளைச் சொல்லத்தான் வேண்டும் என்று தட்டிக் கொடுத்தார்.

# தொண்டு செய்வதையே மூச்சாகக் கொண்ட நீர்வைப்பெருமகன்

— த. பரராசசிங்கம் —

[அமரர் முகாந்திரம், முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களின் 8-வது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது]



யாழ்ப்பாண மாவட்டத்தில் புகழ் படைத்த சிறப்பூர் நீர்வேலி. இந்த நீர்வேலியின் சிறப்பு அத்தியார் இந்துக் கல்லூரியும், பாலர் பகல் விடுதியும், ஐக்கிய இயக்கங்களும் முப்பெரும் ஆலயங்களுமேயாகும்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்கத் தோன்றியவர் முகாந்திரம், முதலியார் அத்தியார் அருணாசலம் சமாதான நீதிபதியாவர். இச் சிறப்புமிகு புதல்வனை 27-8-1887ல் நீர்வேலி பெற்றது.

இவர் சிறு வயதிலேயே கல்வி வேட்கையுடையவராகவும், கடவுள் சிந்தையுடையவராகவும் விளங்கினார். கொழும்பில் பெரிய கம்பனியில் கடமையாற்றும் காலத்தில் இவரின் நற்பண்புகளான நேர்மை, கண்ணியம், கடமையுணர்ச்சி, முயற்சி என்பன இவரைத் தமது பதவியில் உயர்வடையச் செய்தன.

''அன்னயாவினும்
கோடிபுண்ணியம்
ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்''

என்பதை உணர்ந்த தியாகி, தம்மூரிலுள்ள மக்களிடையே அருகிவரும் சமய அறிவை வளர்க்கவும், கல்வியில்லாதவர்களை இல்லாமல் செய்யவும் கலாசாலையமைக்க முன்வந்தார்.

தாம்கற்ற திண்ணைப் பள்ளிக் கூடம் கடனில் மூழ்கியிருப்பதை அறிந்தார். சமயம் வளர்த்துக் கல்வி புகட்டி தன் ஊருக்குப் புகழ் தேடித்தந்த சிவசங்கர பண்டிதர் அவர்களை அணுகி

தாம் அக்கடனைக் கட்டி முடிப்பதாகக்கூறிக் கலாசாலையைத்தம்பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்.

அன்றிருந்த கடனைக்கட்டி முடித்தது மட்டுமன்றிஎழில் மிகு வனப்புடன் புதிய மாளிகைகளையெல்லாம் படைத்து, ஆய்வு கூடங்கள் நிறுவி அதன் மூலம் பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகப்புகுமுக வகுப்புவரை தம்மூர்ச்சிறார்கள் பயிலப்பல வசதிகள் செய்துவைத்தார். அன்னாரின் அழியாச்சேவை அவ்வூர்மக்களுக்கு மாத்திரமன்றி அயலூர் மக்களுக்கும் அரும்பயனை அளித்து வருகின்றது.

அன்னாரின் தன்னலங் கருதாத் தனிப் பெரும்சேவை இன்று ஓர் ஊருணியாக மிளிர்கின்றது,

''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்னும் அப்பர் வாக்கை உணர்ந்த அத்தியார் அவர்கள் கிராமப் பணியில் இறங்கினார்கள்.

கிராமசபை அங்கத்தவராகவும், தலைவராகவும் பல்லாண்டுகள் பணிபுரிந்தார். கிராம முன்னேற்றச் சங்கத்தை உருவாக்கி அதில் ... ஆக இருந்து

தொண்டுகள் பல செய்தனர்.

அன்னாரின் அருந் தொண்டேயிடையிடையே கல்ஒழுங்கைகள், தெரு வீதிகளாக மாறவும் ஐக்கிய இயக்கங்கள் உருவாகவும் உதவியது, இன்னும், முதியோர்க்கும், இளையோர்க்கும் சேவை செய்த சீரியான். சிறியோர்க்கும், பாலர்க்கும் பகல் விடுதி யமைத்தார். இவ்விடுதி அரசினரின் நல்லுதவிபெற்று வடமாகாணத்தை அணிசெய்கிறது.

மக்களுக்குச் சேவை புரிந்த மகான், கால், நடைகளுக்கும் சேவை செய்யத் தவறவில்லை, புல் தரைகளின் மத்தியில் நீர் நிலைகளைத் தோண்டியும், ஆங்காங்கு ஆவுரோஞ்சு நடுதறிகளை நாட்டியும் நற்பணிபுரிந்தார்

''கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்'' என்பதற்கேற்ப அத்தியார் அவர்கள் கடவுளை வணங்குவதைக்கருத்திற்கொண்டார் கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் போது அங்கு பஜனைவழிபாடு தம்மூர் கோவில்களில் கந்தபுராணம் விநாயகர் பெருங்கதை பெரிய புராணம் ஆதியன ஓதி உணர்த்துவார் குருபூசைகள் பரிவுடன் செய்வார் எந்நேரமும் திரிபுண்டரமாகத் தரித்த வீபூதியும் துலங்கும் சந்தனப் பொட்டும் அவரின் சமயப் பண்பை விளக்கின

இப்பெரியாரின் தன்னலங்கருதாத் தனிப்பெருஞ் சேவை கண்ட அரசாட்சியார் அன்னாருக்கு முகாந்திரம் முதலியார் சமாதான நீதிபதி முதலிய மதிப்புப் பட்டங்கள் அளித்துக் கௌரவித்தனர்

இத்தனை மதிப்புக்களும் நிரம்பிய நிகரில்லாப் புதல்வன் பொது சேவைக்கென 21-9-1961 வியாழக்கிழமை வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சாமசத்தின் கூட்டமொன்றுக்கு சென்று உடல் தளர்ந்த நிலையில் வீடுதிரும்பினார் மறுநாள் 22-9-61 வெள்ளிக்கிழமை அதிகாலை நீர்வை அன்னை தன் தவப் புதல்வனை பரோபகாரியை இலட்சியவாதியை இழந்தாள் அன்னார் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு என்றும் நிலைக்கும்.

## சகமொழி

1-ம் பக்கத் தொடர்ச்சி

நூற்றுக்கு ஐம்பது வீதமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் டாக்டர்களாகவோ என்ஜினியர்களாகவோ வரவேண்டுமென்று விரும்பி மாணவர்களின் திறமையையும் பணத்தையும் பாழடிக்கிறார்கள்: மாணவர்கள் சிறு வயதில் எந்தவிதமான கல்வியில் அதிகம் நாட்டம் கொள்கிறார்களோ அதே துறையில் மாணவர்களை பயன்படுத்தினால்தான் அவர்களுக்கு வளர்ச்சியேற்பட முடியும். நாடும் முன்னேற முடியும்'

கல்வி கலாச்சார விளையாட்டுப் பகுதிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை திருமதி ஜே. எம் சபாரத்தினம் வழங்கினார்,

பழைய கச்சேரிகள் அல்ல.

இந்தச் சந்தர்ப்பத்தில் பல்வேறு முறையான உள்ளூர் மன்றங்கள் பற்றியும், அவைகளில் கிராமசபையின் அந்தஸ்துபற்றியும் குறிப்பிட விரும்புகின்றேன். இப்போது இலங்கையில் கிராமசபை, நகர, பட்டின, மாநகரசபைகள் போன்றவை இருக்கின்றன இந்த வகையில் இங்கிலாந்திலுள்ள உள்ளூராட்சி முறையை அப்படியே இலங்கையிலும் நாம்பின்பற்றவேண்டுமென்ற அவசியமில்லை.

சில பகுதிகள்இப்பொழுது நகர்ப்புறங்களாக வளர்ந்து வருகின்றன. ஆனாலும் அவைகளை நகரங்களாகக் கணிக்கத் தேவையில்லை. இவைகளை கிராமசபைகளே நிர்வகித்து, வரிகளும் அறவிடமுடியும். அவைகள் மேலும் வளருமேயானால் சிறு பட்டினங்களாக அவைகளை நாம் அமைத்துக் கொள்ளமுடியும். என்னுடைய நோக்கம்என்னவென்றால் சிறிய பட்டினங்கள் சம்பந்தமான சட்டத்தை மாற்றியமைத்து, அவைகளுக்கு மக்கள் ஆதரவுடன் அவைகளுக்கான அமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதேயாகும். இந்தப்பகுதிகள் மேலும் வளர்ந்து நகரசபைகளாகவும், மாநகரசபைகளாவும் மாற்றப்படலாம் இவை நமது நாட்டின் நிலைமைக்கு

கூறியது. டொனமூர் கமிஷன் பிரதேச சபைகள் அமைக்கலாம்என்ற சிபார்சு செய்தபோது மேற்கண்ட யோசனையும் வற்புறுத்தப் பட்டது.

எனவே புதிய உள்ளூராட்சி முறை அமுலுக்கு வரும்பொழுது, ஒரு மாகாணத்துக்குள் உள்ள உள்ளூர் மன்றங்களின் வேலைகளை ஒருங்கிணைக்கவும் பொதுவான பிரச்னைகளைக் கவனிக்கவும் பிராந்திய சபைகள் நிறுதப்படுவது விரும்பத்தக்கதென்று நான் நினைக்கின்றேன். அப்படிச்செய்யப்பட்டால் இப்போதுள்ள கச்சேரிமுறை மறைந்துவிடும். அரசாங்க அதிபர்கள் காணி அதிபர்களாக, ஒரு வேளை உள்ளூராட்சி ஆணையாளர்களாக மாறலாம் என்று நான் நினைக்கின்றேன். தற்பொழுது அரசாங்க அதிபர்கள் உள்ளூராட்சி மன்றங்கள் சம்பந்தமாக பல பணிகளை செய்துவருகிறார்கள் அவர்கள்தொடர்ந்துசேவை செய்வதனால், மத்திய அரசின் பணிகளைசெய்வதோடு, உள்ளூராட்சி ஆணையாளராகவும் கடமையாற்றலாம். இப்பொழுதுள்ள பல இலாகாககள் சுருங்கிவிடும். இவைகளின் பல பணிகளையும், உள்ளூராட்சிமன்றங்கள் செய்யககூடியதாகவும் இருககும்

## ஆங்கில ஆசிரியர்கள்...

மான நிலை என்னவென்றால் தகுதி வாய்ந்த ஆங்கில ஆசிரியர்கள் தேவை அதிகரித்துள்ளதாகும். இதை கல்வி அமைச்சு கவனத்துககு எடுத்துககொள்ள வேண்டும். அவசியமானால் வெளி நாடுகளிலிருந்தும் ஆங்கில ஆசிரியர்களை இங்கு வரவழைககலம்.

இலங்கையில் 19,000 பட்டதாரிகள் வேலையின்றி இருப்பதாகவும் அதிபர் இங்கு குறிப்பிட்டார்.

திருமதி சீதாதேவி மகாதேவா வெற்றியீட்டியவர்களுககுப் பரிசில்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பழைய மாணவர் சங்கக காரியதரிசி திரு. நா. இராசநாயகமும், சிரேஷ்ட வழிகாட்டி செல்வன எஸ் விகனேஸ்வரவேலும் நன்றியுரை நிகழ்த்தினார்கள்

(கா நி)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை வித்துவான் கே கே. நடராஜனால் பெரியபுராண விரிவுரைத் தொடரில் திருநீறணிந்தார்க்கு தீங்குநினையா தீரர்' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

ஆமதபாத் சம்பவம்

## பாகிஸ்தான் நடவடிக்கை

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவரை பாகிஸ்தான் அரசாங்கம் பாகிஸ்தானுக்கு திடீரென அழைத்துள்ளது.

ஆமதாபாத்தில் நடைபெற்றுவரும் இந்து முஸ்லிம் இனக்கலவரம் சம்பந்தமாக ஆராய்வதற்காகவே தூதுவரை பாகிஸ்தான் அழைத்துள்ளது,

## மின்தறி

கோட்டை, வியாழன்

பொதுவேலைப் பகுதி ரூ 1,95,000 செலவில்மெடவல என்ற இடத்தில் மின்தறிகள் நிறுவுவதற்கான திட்டத்தை அமைக்கத் திட்டமிள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்ரோவில் மேலை வீதி63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org